செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதிஹூ (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௨] யாழ்ப்பாணம்: விரோதிகிருதுஹூ மார்கழி மீ ௯ உ வெள்ளிக்கிழமை (24-12-1971) [இல-௩௭

உ
திருச்சிற்றம்பலம்.

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதியாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்.

— மாணிக்கவாசக சுவாமிகள்

# நாவலர் நூல்கள்

[சிதம்பரம் நாவலர் வித்தியாசாலையில் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 92-ஆவது குருபூசை விழா நடைபெற்றபோது, டி வித்தியாசாலை மனேஜர் திரு. தி. க இராஜேசுவரன் அவர்கள் வரவேற்புரை வழங்குகையில் நாவலர் நூல்களைப்பற்றிக் குறிப்பிட்ட பகுதியை இங்கே பிரசுரிக்கின்றோம். அதற்கு ஒரு விளக்கத்தை யாழ். வண்ணை வைத்தீசுவர வித்தியாலய முன்னை நாள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் B A. அவர்கள் எழுதியுள்ளார். அவ்விளக்கமும் பிரசுரமாகின்றது. — ஆசிரியர். ]

இவ்வாண்டிற்கு முன் ஆண்டுகளில் நடந்த குருபூசை வரவேற்புரைகளில் நான் கூறியுள்ளது போலவே இக் குருபூசை வரவேற்புரையிலும் நாவலர் பெருமானைப் பற்றிச் சில குறிப்புக்கள் கூற விழைகின்றேன். அப்படி நான் கூற விரும்புவது அம்மேதகையார் வெளியிட்ட நூல்களைப் பற்றியதாகும். அண்மையில் (22-11-71) ஈழத்திலிருந்து வெளிவந்த 'Indu Sathanam' என்னும் வாரப் பத்திரிகை ஒன்றில் 'A Navalar Chronicle' என்ற தலைப்பின்கீழ நாவலர் பெருமான் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஆண்டு வாரியாகப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன, நான் அரிதிற்றேடி வைத்துள்ள முதற் பதிப்புச சுவடிகளில் காணப்படும ஆண்டுக் குறிப்புக்கள் மேற்கூறிய பட்டியலில் காணப்படும் ஆண்டுக் குறிப்புக்கள் மேற்கூறிய பட்டியலில் காணப்படும் ஆண்டுக் குறிப்புக்களுக்கு முன்னும் பின்னுமாக முரணபடுகின்றன. அப் பட்டியலில் உள்ள ஆண்டுக் குறிப்புக்களுக்கு முன்னும் பின்னுமாக முரண்படுகின்றன. அப்பட்டியலில் உள்ள ஆண்டுக் குறிப்புக்களுக்கு என்ன ஆதாரம என்பது எனக்குத் தெரியாதபடியால், நான் சேகரஞ்செய்து வைத்துள்ள முதற் பதிப்புச் சுவடிகளுள் முக்கியமானவற்றில் காணப்படும் ஆண்டுகளை இங்குக் குறிப்பதை என் கடமையாகக் கொண்டு அவற்றைக் கீழே தந்துள்ளேன்.

திருக்குறள் பரிமேலழகர் உரையுடன்: துன்மதிஹூ வைகாசிமீ (1861) சென்னபட்டணம் வாணிநிகேதன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. (ரௌத்திரிஹூ ஐப்பசிமீ அனறு) இதன் இரண்டாம் பதிப்பு யுவஹூ ஆடிமீ (1875) சென்னபட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

கந்தபுராண வசனம்: துன்மதிஹூ ஆவணிமீ (1861) சென்னபட்டணம் வாணிநிகேதன அசசுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

கந்தபுராணம் மூலம்: சுத்கிலஹூ சித்திரைமீ (1869) சென்னபட்டணம் வர்த்தமான தரங்கணி அச்சுக்கூடத்தில பதிப்பிக்கப்பட்டது.

சேதுபுராணம்: அக்ஷயஹூ புரட்டாசிமீ (1866) சென்னபட்டணம் கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

இலக்கணக் கொத்து மூலமும் உரையும்: அக்ஷயஹூ கார்த்திகைமீ (1866, சென்னபட்டணம் கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

அப்பட்டியலிலே,

"1859 —Published the text of Tirukovaiyar and Thiruvachakam" என்றும் காணப்படுகின்றது திருவாசகம் மூலம் மட்டும் அருட்பா என்னும் நூற்றிரட்டில் சேர்க்கப்பட்டு நாவலர் காலத்தில் வெளிவந்துள்ளது (1866. திருவாசக மூலமும் திருக்கோவையார் மூலமும் சேர்த்து நாவலர் பெருமான் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலைத் தர்மபரிபாலகராக இருந்த தமிழ்ப் பேரறிஞர் பொன்னம்பல பிள்ளையால், இராக்ஷசஹூ தைமீ (1915) பதிப்பித்த சுவடி ஒன்று கிடைத்துள்ளது. அவருக்குப் பின்னர் தர்மபரிபாலகராக இருந்த திருவாளர் விசுவநாத பிள்ளை அவர்கள் காலத்தில் இதன் 'இரண்டாம் பதிப்பு' துந்துபிஹூ ஐப்பசிமீ '1922) வெளிவந்துள்ளது. இதற்குப் பின்னரே

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## ஆர்த்திரா தரிசனம்

காலி, களுவள்ளை ஸ்ரீ மீனும்பிகா சமேத சோமசுந்தரேஸ்வரர் ஆலயத்தில் 1-1-72 சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு நடேஜர் ஆர்த்திரா தரிசனவிழா ஆரம்பமாகி நடைபெறும். விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தபின், விசேஷ மேளவாத்தியசகிதம் சுவாமி வீதிவலம்வரும் அலங்கார காட்சியும் நிகழும்

## ஈழத்துச் சிதம்பர புராண வெளியீட்டு விழா

26-12-71 வியாழக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு ஈழத்துச் சிதம்பர தேவத்தான மண்டபத்தில், நல்லை ஆதீன முதல்வர் திருப்பெருந்திரு. சுவாமி நாதத் தம்பிரான் தலைமையில் ஈழத்துச் சிதம்பரபுராண வெளியீட்டு விழா நடைபெறும். பிற்பகல் 4 மணிக்கு மணற்காட்டு மாரியம்மன் கோவிலிலிருந்து சம்பந்தர்கண்டி, சடையாளி வைரவர்கோவில் மார்க்கம் ஊர்வலமாக புராண ஏடு எடுத்துச் செல்லப்பெறும். தேவஸ்தான மண்டபத்தில் வரவேற்புரை, ஆசியுரை, புராண படனம், பொன்னுடை போர்த்தல், சிறப்புச் சொற்பொழிவுகளும், பாராட்டுரைகளும் நிகழும். இவ் வைபவங்களில் பல அறிஞர்கள் கலந்துகொள்வார்கள்.

## சிதம்பரம், ஸ்ரீ சிவகாமசுந்தரி ஸமேத நடராஜமூர்த்தியின் மார்கழித்
# திருவாதிரை மகோற்சவம்

மேற்படி உற்சவம் 21-12-71 தொடக்கம் 2-1-72 வரை நடைபெறும். விக்னேஸ்வர பூசை, நடராஜர் அனுக்ஞையுடன் விழா ஆரம்பமாகி தினமும் விசேட உற்சவங்கள் நடைபெறும். 31-12-71 இரதோற்சவமும் 1-1-72 காலை 5 மணிக்கு ஆயிரங்கால் மண்டபத்தில் ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கு மகாபிஷேகமும், 10 மணிக்கு அலங்காரமும், விசேஷ பூசைகளும், 2—1—72 இல் முத்துப் பல்லக்கில் வீதியுலாவும் நடைபெறும்.

(ந. நி)

## திருக்கேதீச்சரம் - திருவாசக மடத்தில்
# திருவாசக விழா

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தின் ஆதரவில் 23—12—71 தொடக்கம் 1—1—72 வரை திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் சாதனையும், திருவாசக விழாவும் சிறப்பாக நடைபெறும். சிவபூசை, மகாநாடு, புராண படனம், திருவாசகப் பாராயணம். சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறும். காஞ்சிபுரம் தொண்டை மண்டலாதீன குருமகா சந்நிதானம் சிவத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகள், திருப்பனந்தாள் ஓதுவாமூர்த்தி திரு. முத்துக்கந்த சுவாமி அவர்களும் கலந்துகொள்வார்கள்.

பண்டிதை, சித்தாந்த ஞானகரம் தங்கம்மா அப்பாக்குட்டி, வித்துவான் பொன். கனகசபை முதலியவர்களுடைய சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

ந. நி

# திருவாசகம் திருக்கோவையார்

[செந்தமிழ்ச் சிரோமணி பண்டித வித்துவான் க. கி. நடராஜன் B. O. L., Dip. in Ed கோலாலம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோயில் திருமுறை மகாநாட்டில் நிகழ்த்திய தலைமைப் பேருரை]

(முன் வளர்ச்சி — 3)

'பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்'

என்று பாராட்டப்படும் இனிய கோவை அது. வேதம் என்றும், ஆகமம என்றும், காமநூல் என்றும், தருக்கநூல் என்றும், இலக்கண நூல் என்றும் ஒவ்வொரு சாரார் தத்தமக்கியைந்தவாறு போற்றநின்ற திருக்கோவையாரின் சிறப்புத்தான் என்னே!

ஆரணங்கா ணென்பர் அந்தணர்; யோகியர் ஆகமத்தின்
காரணங்கா ணென்பர்; காமுகர் காமநன் னூலதென்பர்;
ஏரணங்கா ணென்பர் எண்ணர்; எழுத்தென்பர்
இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே',

என்பது பாட்டு. கோவை என்றால் திருக்கோவையே; மற்றக் கோவையெல்லாம் வேலியிற் படருங் கோவை என்பர் என் ஆசிரியர் மகா வித்துவான் மறைத்திரு. சி. கணேசையரவர்கள். பாவை பாடிய வாயால் கோவை பாடுக என்று இறைவனே விரும்பிக் கேட்டுப் பாடுவித்துக் கொண்டது திருக்கோவை என்றால் அதன் பெருமை அறையவும் வல்லமோ? திருக்கோவையாரில் ஓரிடத்தில் மணிவாசகப் பெரு

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்த வைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூறப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. —திருவாசகம்.

தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனை
வானூறுங் கங்கை நிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை இருபோதும் இறைஞ்சிடுவேன்.

—செவ்வந்திப்புராணம்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரன் நாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது௵ மார்கழி ௴ ௲-௨ வெள்ளிக்கிழமை [1971]

## சிறந்த தெய்வக் காப்பியம்

தவந் தனின் மிக்கதொன்றில்லை தாவில் சீர்த்
தவந் தனை நேர்வது தானு மில்லையாற்
றவந் தனினரிய தொன்றில்லை சாற்றிடிற்
றவந்தனக் கொப்பது தவமதாகுமே.

தவத்தினும் பார்க்க மேலான தொன்றில்லை. தவத்துக்கு ஒப்பாகவுமொன்றில்லை. தவத்துக்கு ஒப்புத் தவமேயாகும். தவத்தினால் ஒருவன் செயற்கரிய செய்கைகளைப் புரியலாம். அத்தகைய தவத்தை யீட்டி காரைநகரில் வாழ்ந்த சிவநெறிச் சீலர்கள் ஆண்டி ஐயாவும், அம்பலவி முருகருமாவர். சிதம்பரத்திலே நடராசப்பெருமானுடைய நடனத்தைத் தரிசித்தவர்கள் பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்றழைக்கப்படும் இரு முனிவர்கள். ஈழவள நாட்டிலுள்ள மக்கள் நடராசப் பெருமானுடைய திரு நடனத்தை இங்கேயே தரிசிக்க வழிவகுத்தவர்கள் குறிப்பிடப்பெற்ற ஆண்டி ஐயாவும் அம்பலவி முருகருமாகிய மெய்யடியார்கள். அவர்களிடம் நிறைந்த செல்வமிருந்ததில்லை. அவர்கள் பிரயாசத்தினாலும் தவத்தினாலுந்தான் ஈழத்துச் சிதம்பரம் தோன்றியது. ஐயனார் கோயில் தோன்றிய பின் சிவாலயத்தையமைத்து அங்கு நடராசப்பெருமானைப் பிரதிஷ்டை செய்து ஈழம்வாழ்மக்கள் நடராசப்பெருமானுடைய திருக்கூத்தைத் தரிசிக்க வழிவகுத்தவர்கள் அவர்கள். அச்சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமியின் பெயர் சுந்தரேசர். அம்பாளின் பெயர் சௌந்தராம்பிகை. திரு உத்தரகோச மங்கையிலிருந்து குடியேறிய அந்தணர்களின் சந்ததியார் கிரமமாகப் பூசை செய்து வருகின்றனர். காரைநகரிலுள்ள மக்களும் பெருந்தொகை நிதி திரட்டி கருங்கற் றிருப்பணியும் வேறு பணிகளுஞ் செய்து திருக்கோவிலை சிறப்பித்து வருகின்றார்கள்.

இத்தகைய புண்ணிய தலத்தின் வரலாற்றினை இக்காலத்தவர்களும் பிற் சந்ததியாரும் அறிந்து பெருமானுக்கு அன்புசெய்யும நோக்கத்துடன் ஈழத்துச் சிதம்பர புராணம் என்னும் நாமத்துடன் ஓர் அரிய தலபுராணத்தைப் பாடியுள்ளார் புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்கள். இந்நூலில் புராண மரபு தழுவி சொன்னயம், பொருணயம், சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அணிகள் விளங்கியிருப்பதை யாவரும் படித்து மகிழ்வர். ஆசிரியர் செந்தமிழ் வழக்கை எவ்விதம் போற்றலாம் என்பதை இந்நூலிற் காட்டியுள்ளனர். செந்தமிழ் அவருடைய பரம்பரைச் சொத்து. அவருடைய தந்தையார் தங்கத்தாத்தா என் றழைக்கப்பெறும் உயர்திரு. க சோமசுந்தரப் புலவராவர். ஈழவளநாடு செய்த புண்ணியத்தால் தமிழ் மொழியையும், சைவ சமயத்தையும் காக்கத் தோன்றியவர். நூலாசிரியர் தந்தையாரைப் போலச் சிறந்த கடவுள் பக்தியுடையவர். பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட செய்யுட்களை யாத்துள்ளார். அவரின் தந்தையாருடைய குரு சுப்பிரமணிய முனிவரையும், கொழும்புத்துறை சிவஞானச்செல்வராகிய யோகர் சுவாமிகளையும், தந்தையாரையும் வந்தித்துப்பாடியமையினால் தானென்பதற்று இறைவன் திருவருள் துணைகொண்டு நூலைப்பாடினரென்பது புலனாகும். சேக்கிழார் நாயனார் பெரியபுராணத்தைப் பாடிய வரலாற்றினை உமாபதி சிவாசாரியார் சேக்கிழார் புராணத்தில் சிறந்த முறையில் போற்றுகின்றார். அதில் ஒரு இடத்தில் திருவருளே சேக்கிழார் நாயனாருக்கு அந்நூலினைப் பாடத் துணை புரிந்ததென்பதை அவர் குறிப்பிடுகின்றனர். ''ஏருலகே லாமுணர்ந்தோ தற்கரிய வன்னென் றிறைவன் முதலடியெடுத்துக் கோடுத்தருளக் கொண்டு, பாருலகினுமகணின் றெடுத்துக் கைநீட்டப் பாடி முடித்தனர் தொண்டர் சீர் பரவ வல்லார்'' இந்நூலினை ஆக்கியவரும் திருவருட்டுணைகொண்டு பாடியுள்ளனர் என்ற உண்மை, நூல் கற்போர்க்குப் புலனாகும்.

பருந்து பறக்கும்பொழுது அதன் நிழலும் அதனைத் தொடரும். பருந்தின் நிழலைப்போல கணவனுடைய தொடர்பைத் துணைக்கொண்டு வாழ்க்கையை நடத்துகின்ற பண்டிதைமணி சோ. பரமேசுவரி அம்மையாரை ஆசிரியர் வாழ்க்கைத் துணைவியாக நல்லூழினால் பெற்றுக் கொண்டார். அவ்வம்மையார் தாம் எவ்வாறு கணவனுருடைய கருத்துக்கிசைய இல்வாழ்க்கையை நடத்தி வருகின்றனரோ அந்த முறையில் இப் புராணச் செய்யுட்களுக்கு கருத்து வேறுபடாவண்ணம் செந்தமிழ் நடையில் உரையெழுதியுள்ளனர். இந் நூலினைப் படிப்பவர்களுக்கு இறையக்தி பெருகும். தமிழறிவும் சைவ சமய அறிவும் பெருகும். இந் நூல் வெளி வருதற்குக் காரணமாயுள்ளவர் திண்ணபுரப் பெருமானுக்குத் தொண்டு செய்யும அந்தண குலத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்களாவர். அவருடைய தொண்டினைச் சைவ உலகம் பாராட்டுதல் வேண்டும்.

திண்ணமா புரத்தவர் தெய்வக்காதையை
எண்ணுவார் கற்பவர் காதி லேற்பவர்
மண்ணிலே செல்வமும் வாழ்வு மெய்தப்பின்
விண்ணிலே சிவபுர மேவி நிற்பரால்,

## நாவலர் நூல்கள்

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

திருவாசகமூலம் மட்டும் தனியாக விஜய௵ (1953) வெளியிடப்பட்டது. இதுபற்றிச் சாதாரண௵ (1970) வெளிவந்த அந்நூலின் பதிப்புரையில் விரிவாகக கூறியுள்ளேன்.

அப்பட்டியலில் கீழ்வரும் குறிப்புக்களும் காணப்படுகின்றன.

"1869—Published Poliarutpa Maruppu"

"1869 — Case arising from the publication above."

திருவாளர் த கைலாசபிள்ளை எழுதிய "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சரித்திரம்" எனனும் நூலில் காணபபடும் "அருட்பா வழக்கு" என்பதை இக்கூற்று ஆதாரமாகக் கொண்டது போலும். நாவலர் பெருமான் காலததில் "போலி அருட்பா மறுப்பு'ப் பற்றி வழககு நடக்க வேயில்லை; அபராத மானநஷ்ட ஈடுகோரித் தொடுக்கப்பட்ட வழக்குத்தான நடந்தது. 'மருட்பா மறுப்புப்' பற்றி வழக்கொன்று 1904 ஆம ஆண்டு நடந்தது; அது வள்ளலார் 'தமயன தனராய' வடிவேற்பிள்ளை அவர்கள பரசமயகோளரி சதாவதானம் நா கதிர்வேற்பிள்ளை அவர்கள மீது தொடுதது நடந்ததென்பதைப் பல சான்றுகளுடன் நாவலர் பெருமானின் 90 ஆம் குரு பூசை வரவேற்புரையில் நனகு விளக்கியுளளேன். இந்த விவரங்களை மறுபடியும் இங்கே கூற வேண்டிய அவசியமில்லை என விடுககிறேன. இதனால் அச்சிடபபெற்ற என வரவேற்புரைகளைப் பெரும்பாலோர் கவனததுடன் படிப்பது இல்லையெனப் புலப்படுகிறது. ஆயினும் நாவலர்பெருமானின வாழகசை வரலாற்றில் ஈடுபட்டுத் தம கருத்தைச் செலுத்துகிறவர்களுக்குப் பயனபடக் கூடுமென்றே நான் பெருமுயற்சிசெய்து தெரிந்துகொண்ட செய்திகளை என வரவேற்புரைகளில் எழுதி வருகிறேன.

x x x

## தமிழாராய்ச்சிமாநாடு

யாழ்ப்பாணத்தில் அடுத்த ஆண்டு நிகழவிருக்கும் 4- ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கெனயாழ். மாநகரசபை அடையாள நிதி ஒதுக்கியுள்ளது.

## நாவலர் நூல்களின் ஆதிப்பிரசுரம்—
# ஒரு விளக்கம்

சிதம்பரத்தில் நாவலர் தர்மத்துக்கு நற் பொறுப்பாளராயிருக்கும் அன்பர் தி. க. இராசேசுவரன் நாவலர் பெருமானின் 92-ஆம் குரு பூசைவிழா வரவேற்புரைக்கு நான் 22-10-71 ல் ஆங்கில இந்துசாதனத்தில் வெளியிட்ட நாவலர் சம்பந்தமான பட்டியலை (A Navalar Chronicle) முக்கிய பொருளாகக் கொண்டதைப் பற்றி மகிழ்ச்சியடைகிறேன் அவர்கள் கூறியதற்கு விடை கொடுக்கு முன் எனது கட்டுரையின் நோக்கத்தையும், அதற்கு ஆதாரம் எதுவென் பதையும் கூற விருப்புகிறேன்.

நான் தொகுத்த பட்டியல் நாவலர் அவர்கள் உட்பட ஐந்து பெரியோர்களைக் கௌரவிக்க முத்திரைகள் வெளிட்டது சம்பந்தமாக 29-10-71 இல் கொழும்பு கலாபவனத்தில் நடைபெற்ற கண்காட்சியை முன்னிட்டு எழுதியதாகும். அதன் நோக்கம், தமிழ் தெரியாத மக்களுக்கு நாவலர் பெருமானின் வாழ்க்கை வரலாற்றையும் அன்னார் ஆற்றிய பணிகளையும சுருக்கமாக எடுத்துக் காட்டுவதாகும். அது ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையாக எழுதப்படவில்லை.

இப் பட்டியல் ஓரே இரவில் நாவலர் மாநாடு சிறப்பு விழா மலரிலிருந்து (1969) தொகுக்கப்பட்டதாகும். அம மலரில நாவலர் களஞ்சியம் என்னும் பகுதியில் முதலாம அனுபந்தமாக, "நாவலர் வாழ்க்கைத்திகதிகள்" காணப்படுகிறது. அதுவே எனது கட்டுரைககு ஆதாரம். பிரதி பண்ணும்பொழுதோ அல்லது அச்சிடும்பொழுதோ ஒரு பிழை ஏற்பட்டு விட்டது. அதாவது சேது புராணம் முதலியன அச்சிடபபட்டது 1866 ம் ஆண்டென இருகக வேண்டியது, 1864 ம ஆண்டெனக் காணபபடுகிறது.

திரு. இராசேசுவரன்தமது வரவேற்புரையில் முதல் பதிப்பு நூலகளைப் பார்வையிட்டே தமது குறிப்புக்களை எழுதியதாகக் கூறியுள்ளார். அவர் கூற்று எலலா நூல்களுக்கும பொருந்தாது என்பதை காட்ட விரும்புகிறேன். கந்தபுராண வசனம் துன்மதி௵ (1861) ஆவணி ௴ அச்சிடப்பட்டதாகக் கூறியுள்ளார். ஆனால் கந்த புராண வசனம் முழுவதும் நாவலர் அவர்களால் எழுதப்படவில்லை யென்பது நாவலர் அவர்கள் நூல்களோடு பரிச்சயமுள்ளவர்களுக்கு நன்கு தெரியும். கந்தபுராண வசனத்தின் பிற்பகுதி நாவலர் அவர்கள் மருகர் பொன்னம்பலபிள்ளை அவர்களால்எழுதப்பட்டது. இதுபற்றிக் கந்த புராண வசனப் பதிப்பில் பொன்னம்பலபிள்ளை கூறியிருப்பது பின் வருமாறு:—

''ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இற்றைக்கு ஐம்பதுவருஷங்களுக்கு முன்னே இக் கந்தபுராண வசனத்தை அசுரகாண்டம் அசுரயாகப் படலம் வரையும் எழுதிச் சஞ்சிகையாக வெளிப்படுத்தினார்கள். எஞ்சிய பாகம் அவர்களால்எழுதப்படாமையால் நான் அதனை நூதனமாக எழுதி, அவர்கள எழுதியதையும சேர்த்து அச்சிட்டேன். (சாதாரண௵ பங்குனி ௴)"

இனி, "திருவாசக மூலம் மட்டும் அருட்பா எனனும் நூற்றிரட்டிலே சேர்க்கப்பட்டு நாவலர் காலததில் (1866) வெளிவந்துள்ளது" என்றும் திருவாசகம் மூலமும் திருக்கோவையார் மூலமும் சேர்த்துப் பொன்னம்பலபிள்ளையால் இராக்ஷஸ௵ (1915) தை ௴ பதிப்பிக்கப்பட்டதென்றும திரு. இராசேசுவரன் கூறியுள்ளார். ஆனால், நாவலர் காலத்தவரும், அவர் மாணக்கர்களில் ஒருவருமான கனகரததின உபாத்தியாயர் தமது நாவலர் சரித்திரத்தில் பினவருமாறு எழுதியுள்ளார்.

"சென்ன பட்டணம் சேர்ந்தவுடன் திருவாசகம திருக்கோவையார் என்னுமிரண்டையும பரிசோதிதது அவர் மாணக்கராகிய சதாசிவப் பிள்ளை பேரால் சித்தார்த்தி௵ (18 9, வைகாசி ௴ வெளிப்படுத்தினார். (பக்கம் 41. 1968 ம் ஆண்டுப் பதிப்பு)"

மேற் கூறியவற்றால் நாவலர் நூல்களின் காலக்கிரமம பற்றி மேலும் ஆராய்ச்சி நடைபெற வேண்டுமென்பது புலனாகும்.

ச. அம்பிகைபாகன்,
முல்லாகம், 21-12-71.

## திருவாசகம் திருக்கோவையார்

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

மான் எத்துணை தம்மைத் தாழ்த்திப் பேசுகின்றார் என்று பாருங்கள்.

'தேவ்வரை மேய்யேரி காய்சிலை யாண்டேன்னை
யாண்டு கோண்ட சேவ்வரை மேனியன்'

மூப்புரவாசிகளாகிய அரக்கர்களை அழிக்கப் பெரிய ஆயத்தங்கள் செய்த பெருமான் பெரிய மேரு மலையை வில்லாக வளைத்தார் ஆயின், பின் அவ்வில் பயன்படுத்தப்படவில்லை. அப்பகைவரது புரங்களைச் சிரித்தே எரித்துவிட்டார். ஆயின், அந்த மேருவாகிய பெருங் கல்மலையை வளைத்தது வாளாவளைத்ததன்று. கருங்கல் மனம் படைத்த என்னை வளைப்பதற்கு முன் அந்த மலையை வளைத்துப் பழகவேண்டியிருந்தது, என்னை ஆண்டுகொண்ட அவ்விறைவனுக்கு என்ற குறிப்புத் தோன்ற மேரு மலையினுங் கடினமான கல்போன்றது தன மனம் என்றும், அத்தகைய மனத்தையும் வளைத்து ஆண்டுகொண்டான் இறைவன் என்றும் சொல்லுஞ் சிறப்புத்தான் என்னே! இதுபோன்று எத்தனையோ அழகுகளையாம். அதிற் காணலாம் விரிப்பிற் பெருகும. திருவாசகம் மட்டுமன்று, திருக்கோவையாரும் படிப்போருள்ளத்தை உருக்குந் தகையதே. (வளரும்)

## காரைநகர், சிவன் கோவில்

ஈழத்துச் சிதம்பரம் என்னும் காரைநகர் சிவன்கோவிலின் வருடாந்த இரதோற்சவம் 31—12—71 வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெறவிருக்கின்றது. தமிழகத்துப் பிரபல தவில் வித்துவான் டி மூத்துகுமாரசாமிப்பிள்ளையின் கச்சேரி இடம்பெறவுள்ளது. இரதோற்சவத்திலன்று காலை 10-30 மணியிலிருந்து 12 மணிவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேர்முக அஞ்சல்செய்யும் மணிவாசகர்சபையினர் அன்னதானம் வழங்குவர்.

# திருக்குறள்

( உரைக் கொத்து )

THE GREAT KURAL : Introduction

1

### பாயிரவியல்

[தமிழ் நூல்களுக்குள் தலை சிறந்தது திருக்குறள். அதனைத் தமிழ்மறை என்றழைப்பர், அதிற் சொல்லப்பெறாததொன்றுமில்லை. பழைய காலத்தில் அதற்கு பதின்மர் உரை கண்டனர். அவற்றுள் ஐந்து பேருடைய உரைகள் வெளிவந்திருக்கின்றன. பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காலிங்கர் என்ற ஐவராவர். பிற்காலத்தில் பிறரும் உரையெழுதியுள்ளனர். திருக்குறள் உலகிலுள்ள முக்கியமான பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்திலே சிறந்த ஆற்றலும், அறிவும் ஆராய்ச்சி வன்மையும் பெற்றுள்ள சிவபக்த மாமணி திரு க. சூரசங்காரம் அவர்கள் முற்கூறிய திருக்குறள் உரைகளை ஆராய்ந்து "திருக்குறள் உரைக்கொத்து" என்னும் நூலையெழுதியுள்ளனர். ஒவ்வொரு குறளுக்கும் வெவ்வேறு உரைகளையும், அவற்றுக்குப் பொருத்தமான ஆங்கில மொழிபெயர்ப்பையும் தந்திருக்கின்றனர். தமிழபிமானிகளுக்கு நல்விருந்தாகும் அவருடைய நூலிலிருந்து முதற் குறளின் உரைகளை இங்கு பிரசுரிக்கின்றோம்.] —ப-ர்

**அதிகாரம் 1.** கடவுள் வாழ்த்து: Praise of the Lord

1 *அகர முதல வெழுத்தெல்லா மாதி*
*பகவன் முதற்றே யுலகு.*

1. *உலகிலுள்ள எழுத்துக்களெல்லாம் 'அ' என்னும் ஒலியை முதலாக உடையன அது போல, உலகம் முழுமுதற் கடவுளை முதலாக உடையது.*

1 The sound 'A' (அ) is the starting point of the all letters in the world; even so, is the Lord Supreme the efficient cause of all that exists.

2. *எழுத்துக்கள் எல்லாம் அகரத்தைத் தமக்கு முதலாக உடையன. அவ்வண்ணமே, உலகம் ஆதியாகிய பகவனை முதலாக உடையது.*

2. The letter 'A' is the first of all letters; even so, is the eternal Bhagavan the substratum of everything that exists.

3. *அகர ஒலி தனியாகவும், மற்ற எழுத்துக்கள் எல்லாவற்றினோடும் இணைந்தும் இணையாமலும், இணைந்தும் இருப்பதாலும், உலகிலுள்ள வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு வடிவம் பெற்றிருப்பதாலும், அதனையே எழுத்துக்களெல்லாம் முதலாக உடையன. அதுபோல, உலகமும் தாமே தனியாகவும், இணைந்தும் இணையாமலும், இணைந்தும் விளங்கி வெவ்வேறு பெயர்களும் உருவங்களும் கொள்ளும் ஆதியாகிய பகவனை முதலாக உடையது.*

3. The sound 'A' (அ) maintains its individuality, mixes with the sounds of other letters and yet it remains distinct and also remains concealed in and mixed up with them it takes different forms in the various languages Hence it is the origin of all letteres Even so, is the primal and the supreme Being, Who is independent of everything else, does pervade, everything else and yet destinct from them and does remain concealed in and mixed up with everything else and who takes different names and forms, the first cause of the world.

4. *உலகத்தில் ஒலி வடிவாயும் வரி வடிவாயும் இருக்கும் எழுத்துக்களெல்லாம் ஆதி நாதத்தையே முதலாகக் கொண்டு இயங்குகின்றன. அதுபோல எல்லா உலகமும் ஆதியாகிய பகவனை முதலாகக் கொண்டு இயங்குகின்றன.*

4. All letters in the world with sounds and/or forms have *Adi Nada* (eternal sound) as their source and origin. Even so, do all the worlds have the beginning-less Lord supreme for their first cause

*அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாத மாத்திரையாகிய இயல்பால் பிறத்தலாலும் ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றும் உணர்தலானுங் கொள்க என்று விளக்கும் பரிமேலழகர் உரையைத் தழுவியது இரண்டாவது உரை.* (தொடரும்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு: இலக்கம். M B 10679

வண்ணார்பண்ணை மேற்கு 1. நைனா முகமது கை பெண் சுல்தான் பீபீ
யாழ்ப்பாணம். 2 நைனா முகமது மூகமது சலீம்
3. அப்துல்கபூர் பெண் எகியா உம்மா
எதிராக —வழக்காளிகள்
வண்ணார்பண்ணை மேற்கு. அசனு மரிக்காயர் கச்சுமுகமது
யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10679-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972ம் ஆண்டு தை மாதம் 31ம் திகதி (31-1-72) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபாய் 14,015/-ம். 14-3-69 தொடக்கம் 2-12-69 வரைக்கும் ரூபாய் 13,500/-க்கு 6 வீத வட்டியும் அதன்பின் முழுத் தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 387-92 சகிதம் செலவில் ரூபா 200/-ம் தீர்வைத்தொகையில் ரூபாய் 1,600/-உம் கட்டப்பட்டுள்ளது. மேலும் ரூபாய் 1,500/- கட்டப்பட்டுள்ளது

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை 'விழாத்திப்புலம்' (Vilaththippulam) D 18?/247 பதிவின்படி வி பர 1, குளி 16, 1/8 ஆறுல் D 207/33 பதிவின்படி வி. பர 1, குளி 1?, 1/8 இந்த வி. பர 1, குளி 16, 1/8க்கும் எல்லை: கிழக்கும், மேற்கும் ரோட்டு, வடக்கு ஈட்டுக்காரரின் ஆதனம், தெற்கு கையொழுங்கை இதடங்கலும்

மல்லாகம். செ பாண்டித்துரை
21-12-71 கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
Commissineor of Sales & Values

எம் 354 24—12—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 11835

1. கனகசபை சுந்தரலிங்கம் 2. மனைவி இராசேஸ்வரி
இருவரும்; தங்கோடை, காரைநகர். —வழககாளி
எதிராக
ஆறுமுகம் கனகசபை கைம்பெண் பாக்கியலெட்சுமி
B. A. தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற M. B. 11835-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி- பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1972-ஆம் ௵ தை மாதம் 19-ஆம் திகதி (19-1-72) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 13409/-ம் 7-7-70 தொடக்கம் 30—1—71 வரைக்கும் ரூபாய் 10000/-க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 513-81

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை வரிவளவு நி. பர 7 ஆறுக் 1951ம் ௵ ஆடிமீ 13ம்திகதி கூத்தூரவுபெற்ற நில அளவையாளர் M. அசோகிடன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1531ம் இலக்க படத்தின்படி நி. பர. 5 குளி 6, 4/5ம் இரு கல்வீடுகளும் கிணறும் செய்மயின் வாலவிசிகளும் சொல்லப்பட்ட நி பர. 5 குளி 6, 4/5 எல்லை கிழக்கு இராமலிங்கம் நடேசவுக்கும் மகள் பாக்கியம் இரத்தினசிங்கத்தின் மனைவிக்குமுரிய ஆதனம், வடக்கு பொன்னையா இராசரத்தினத்துக்கும் மறுபேர்களுக்குமுரிய ஆதனம், மேற்கு தாமோதரம்பிள்ளை பெண் நல்லநாயகியின் ஆதனமும் ஒழுங்கையும் நாகலிங்கம் பெண் தங்கம்மாவின் ஆதனமும் தெற்கு நாகலிங்கம் பெண் தங்கம்மாவிற்கும் கனபதிப்பிள்ளை கனகரத்தினத்துக்கும் மறுபேர்களுக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும்

'வேல்பதி' S. சங்கரப்பிள்ளை J P
புத்தூர். 11-11-71 கொமிஷனர் & விலைமதிப்பாளர்
எம் 360 24—12—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்
கோட்டில்
இல: M B 11712

1 குமாரசாமி விஷபாதினம் 2. அப்புத்துரை தங்கராசாவும் பெண் 3. சீதா லெட்சுமியும் மூவரும் கந்தர்மடம் தற்போது 215 பாக்வீதி கொழும்பு
— வழக்காளிகள்
எதிராக
— எதிராளிகள்.

1. சின்னத்தம்பி பொன்னையா சுப்பாத்துரையும் 2. பெண் மாணிக்கமும் இருவரும் 40-ம் நம்பர் சென்றல் ஸ்ரோஸ் இரத்தினபுரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11712-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணி 1972-ம் ௵ மாசி மீ 19 ஆம் திகதி (19-2-72) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3480/- இதில் ரூபா 3000/-க்கும் 17-11-70 தொடக்கம் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 341-10 செலவழித்த செலவு ரூபாய் 232-65 வெலி வாத்துச் செலவு ரூபாய் 64-50 எதிர்வரும் செலவு ரூபா 43-95 கோட்டுச் செலவில் ரூபா 125/- கொடுபட்ட வகையில் கழிவுபட வேண்டியது.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை 'இக்கிராணையும் அச்சலைக் குளத்துத்திடல் (Gkkiranai Achchalaikulaththuthidal) பர. ரு 5 குளி 1 எல்லை கிழக்கு குளம், வடக்கு சின்னத்தம்பி கந்தையா விணுதனம் மேற்கு சின்னத்தம்பி கந்தையாவுக்கும், வல்லிபுரம் கந்தையாவுக்கும், இளையதம்பி செல்லத்துரைக்கும் பெண் சீவனுயகத்துக்குமுரிய ஆதனங்கள், தெற்கு ஒழுங்கை

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வட்க்கு உடுவில் கோவிற்பற்று கந்தரோடை இறை 'மூததாபபுலவு' (Mooththappulavu) பர. ரு. (5, 1/2) ஐந்தரையும், கிணறும், தென்னைகளும், மற்றும் பயிர்வகைகளும், எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு இளையதம்பி மயில்வாகத்தினுதனம், மேற்கு சின்னத்தம்பி பெண் சின்னத்தங்கத்தினதும் ஆறுமுகம் பெண் இரத்தினமமாவினுதனங்களும் வழியும் இறைவாய்க்காலும் தெற்கு நடை வரம்பும் இறை வாய்க்காலும் மேற்குக் காணிக்காரருக்கு வழிப்பாவிப் புரித்தும் இறைவாய்க்காலும் புறநீங்கல்.

3. ஷெ இறை தெற்குப் பக்கமாக 'மருதடி வயலும் மருதடி தலைமடையும் மருதடியும் மருதடி தலைமடையும்' (Maruthadi vayalum Maruthadi thalaimadaium Maruthadium Maruthadi Thalaimadaium) பர. ரு. 5 (ஐந்தும்) தென் கிழக்கிலிருக்கும் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு வாய்க்கால் வடக்கு ஜீவாநதம்பெண் அம்பிகைக்குரிய ஆதனம், மேற்கு அப்பாபிள்ளை பெண் இரத்தினவல்லியும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு சுப்பிரமணியம் நாகமுத்தருக்கும் பெண் சின்னப்பிள்ளைக்கும் அங்கேயிருக்கும் கிணற்றில வடக்கெல்லைக காணிககாரனுக்கு இறை வாய்க்காலும் வழிப் பாவிப் புரித்தும் மேறகெல்லைக் காணிக்காரனுக்கு இறைவாய்க்காலும் வழியும் பிற நீங்கல்.

க. சுப்பிரமணியம்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
24-ஆம் நம்பர்
1-ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 16-12-71
எம், 359 24—71

## அணிந்துரை அரங்கம்

**விவேகானந்தா திருக்குறட் கலண்டர் –1972**
வெளியிட்டோர்:

விவேகானந்தா அச்சகம், புத்தகசாலை – யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் விவேகானந்தா அச்சகத்தாரால்வெளியிடப்பெற்ற திருக்குறட் கலண்டர் வரப்பெற்றோம்.

கண்கவர் வனப்பில் திருக்குறட் பாக்களையும் நன்னெறி பொதிந்த நற்றமிழ்வாக்கியங்களையும் திதி, நட்சத்திரம், சுப நேரம், விரதாதி காலங்கள், சகல மதத்தவர்களின்தும் விசேஷதினங்கள், தமிழ் ஆங்கில சிங்கள மொழிகளில் நாள் மாத விபரங்கள் என்பவற்றை எல்லோரும் விளங்கக்கூடிய முறையில் வெளிவந்திருக்கிறது. அரசாங்க விடுமுறைகள், போயா தினம் என்பனவும் குறிக்கப் பெற்றுள்ளன. இல்லங்களை அழகுபடுத்தக்கூடிய சிறந்த மூவர்ணப் படங்களை யுடையது. அறிஞர் விரும்பும் வண்ணம் சிறப்பாக வெளிவந்துள்ளது.

## திருவாசக விழா

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் திருவாதவூரடிகள் புராணப் படிப்பு சிறப்பாக நடைபெற்று வருகிறது. எதிரேவரும் 28ஆம் தேதி பிட்டிப்பூசைப் படிப்பன்று ஆலய வீதிக்கு மண் சுமந்து பரவிச் செப்பனிடும் பணியைச் செய்ய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினர் முன் வந்துள்ளனர். திருவாதிரையன்று மணிவாசகர் ஊர்வலமும் திருவாசக விழாவும் நடைபெறும், சைவ சமய அபிவிருத்திக் கழகத்தலைவர் திரு. க. சொக்கலிங்கம் தலைமையில் பல அறிஞர்கள் உரை நிகழ்த்துவர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 10694

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு B. A. தம்பி ஒழுங்கை, சின்னத்துரை கைம்பெண் நாகேஸ்வரி —வழக்காளி

எதிராக

கொக்குவில் மேற்கு - கொக்குவில்
(1) சடையர் விசிங்கமும் (2) மனைவி தங்கமுத்துவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10694-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ஆம் ஆண்டு தை மாதம் 31-ந் திகதி (31—1—72) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 1195/-ம் 20-3-69 தொடக்கம் 18-9-69 வரைக்கும் ரூபா 1000/-க்கு 10 வித வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வித வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 296-85 சதம். இதில் ரூபா 300/- குறைவாக,

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் டிவிஷனும் நல்லூர் கோவிற்பற்று கொகுவில்இறை 'கள்ளிக் கொக்கான் காலக் கொக்கான்' எனும் காணி, பர, நில இலாச்சம் 1, 1/2 யும் மேற்குப் பக்க காணிக்கும், தோட்டத்துக்கும் சென்றடையும் வழியும் காணியும் ஒருமித்த, இந்த பர நில இலா 1, 1/2 க்கும் எல்லைகள்: கிழக்கு கந்தர் சடையரின் ஆதனம். வடக்கு வயித்தி இராமன் பெண் கனகம்மாவின் ஆதனம். மேற்கு கந்தன் சுப்பனின் ஆதனம். தெற்கு சிவசம்பு மயில்வாகனத்தின் ஆதனம், மேற்கு பக்கக் காணியின் கிணற்றில் அதைச் சேர்ந்தவைகளின் உரிமையும், தண்ணீர்ப் பங்கும், வடக்குப் பக்கக்காணி ஊடாக தெற்குப் பக்கக் காணிக்குச் செல்லும் பாதை வழி உரிமையும், வழி வாய்க்கால் பாவிப்பு உரிமையும் உள்ளது உடையதும் யாழ்ப்பாணம், காணிக் கந்தோர் பதிவு இலக்கம் D. 279/286.

எ. பி. பி எதிர்மன்னசிங்கம்
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்.

107, பெரியதெரு.
யாழ்ப்பாணம்.
15-12-71
எம். 351 24-12-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B 8266

வட்டுக்கோட்டை கிழக்கு. கதிரவேலு கெங்காதரம்பிள்ளை
எதிராக —வழக்காளி

மில் ஒழுங்கை, சங்கானை: 1. முருகுப்பிள்ளை தம்பையாவு
2. பெண் இராஜேஸ்வரி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8266-ம் இலக்க வழக்கின் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1972-ம் ஞூ ஜனவரி மாதம் 26-ந் திகதி (26-1-72) புதன்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3865/-ம் இதில் ரூபா 2000/-க்கு 30-6-66 தொடக்கம் 6—8—68 வரையில் 10 வீத வட்டியும் அதற்குப்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 307/-ம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கிழக்கு இறை "பிளாக கடவை" நிலப்பரப்பு 4½யும் கட்டிடங்களும் கிணறும் செய் பயிர் வான்பயிர்களும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லைகிழக்கு கணபதி மகள் ஆச்சிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு செல்லப்பு கைம்பெண் செல்லமுத்துவுக்கும் பங்காளருக்குமுரியவாதனம். மேற்கு கையொழுங்கையும் அம்பலம் செல்லையாவுக்கும் பெண் அன்னம்மாவுக்குமுரியவாதனம், தெற்கு நல்லதம்பி பெண் இராசம்மாவின் உரித்தாளருக்கும் பங்காளருக்குமுரியவாதனம், இதடங்கலும் விற்கப்படும்.

S. இரத்தினசபாபதி, J. P.
கொமிசனரும், விலைமதிப்பாளரும்

ஸ்ரேசன் ரோட்,
கோண்டாவில், 7-12-71.
எம். 253 24-12-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M, B. 9959

யாழ்ப்பாணம், அத்தியடி 1. சோமசுந்தரம் கணபதிப்பிள்ளை
2. பெண் நாகரத்தினம்
எதிராக —வழக்காளிகள்

யாழ்ப்பாணம். திருநெல்வேலி
1. கந்தையா குமாரசிங்கம் 2. பெண் கனகம்மா
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B, 9959 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ம் ஆண்டு (ஜனவரி) தை மீ 12-ந் திகதி (12-1-72) புதன்கிழமை முற்பகல் 10—00 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 6860-ம் இதில் ரூபா 4000 க்கு 8-3-68 திகதி தொடக்கம் 1-10-68 திகதி வரைக்கும் 100 க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியு கோட்டுச் செலவு ரூபா 313-40 சதமும். இதில் ரூபா 1600/- இறுபட்டது

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க் கோவிற்பற்று திருநெல்வேலியிறை வென்தக்கோனூர் வளவு நிலப்பரப் இரண்டரை (2½) செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு முருகர், இராமுப்பிள்ளையின் உருமைக்காரருக்குரிய ஆதனம். மேற்கு ஆறுமுகம் கைம்பெண் செல்லத்தின் ஆதனம். தெற்கு கந்தர் சின்னத்துரைக்குச் சின்னத்துரை நாகமணிக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

முற்பதிவு D 130/133:

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும்- விலைமதிப்பாளரும்
Commissioner & Valuer

தெல்லிப்பழை. 5-12-71
எம் 357 24-12-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம்: M B 5956

மல்சி (Malceu) சீவியகால காப்புறுதி கூட்டுஸ்தாபனம்
54ம் நம்பர், ஜம்மா மொஸக் லேன், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் பெரியகடை.
முத்துக்குமாரு குழந்தைவேலு கதிரவேலு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 5956-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் நன்கு விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1972-ம் ஞூ மாசி மீ 24-ம் திகதி (24-2-72) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 6166-72ம் இதில் ரூபாய் 5000/-க்கும் 13-8-6 தொடக்கம் 1-12-64 வரைக்கும் 100க்கு 10% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவுரூபா 340-90½ இவ்வழக்கின் சார்பில் ரூபா 500 கட்டப்பட்ட வகையில் கழிபட வேண்டியது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை புதிரியடி (Puthiriyady) இரண்டு (2) குளியும் இக்காணிக்குள் அடங்கியுள்ள புதிய கட்டிடத்தின் பகுதியும் அதைச்சேர்ந்தவைகளும் பதிவு எண் D. 350/225 இறை மதிப்பு இலக்கம்: 38, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். எல்லை கிழக்கும் வடக்கும் இதில் சொல்லப்பட்ட எதிரியின் ஆதனம், மேற்கு பரமசாமிச் செட்டியார் கனகசபைச் செட்டியாரின் ஆதனம், தெற்கு ரோட்டு D 230/223 ல் பதியப்பட்டிருக்கிறது.

க. சுப்பிரமணியம்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்

24-ஆம் நம்பர்
1-ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 20-12-71
எம். 358—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல M B 11778

1. மனவல் அந்தோனிப்பிள்ளை கரையூர் யாழ்ப்பாணம்
—வழக்காளி

எதிராக

1. பொன்னம்பலம் விசயரட்ணம் சுண்டிக்குளி யாழ்ப்பாணம்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 11778-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ம் ஞூ ஜனவரி மீ 3-ம் உ (3-1-72) திங்கட்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4770/-ம், 17-6-70 தொடக்கம் 13-1-71 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு 223-75ம் இதில் ரூபா 1000/- நீக்கி

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை முதலைக்குளம் வயல்' நெ. பர. 4ம 3, 1/3 குளியும் கல் வீடும், கிணறும், வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு நாகன் மனவலுக்கும் பெண் அக்கினேசுக்குமுரிய ஆதனம், வடக்கு இக்காணிக்குப் போவதற்காய் விடப்பட்ட ஒழுங்கை, மேற்கு முடிக்குரிய ஆதனம், தெற்கு திசவீரசிங்கத்துக்கும் பருமேருக்குமுரிய ஆதனம். இவையடங்கலும் அதற்குச் சொந்தமானவையும்.

J. A. எட்வேட்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை, 15-12-71.
எம் 359-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 11247

காரைநகர். கள்பூமி 1, சுப்பிரமணியம் நடராசா
2. பெண் நேசமணி (முருகேசு பொன்னம்பலம் மகள்) —வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம், நாவலர் ரோட்டு. இல: 305
1. வயிரவப்பிள்ளை மாணிக்கம்
2, பெண் பாக்கியம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11247-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1972-ம் ஆ தை (ஜனவரி) மாதம் 10-ந்திகதி (10-1-72) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 15,625/-ம் இதில் ரூபா 10,000/-க்கு 17—11—69 திகதி தொடக்கம் 9—5—70 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு 468-03 சதம். இதில் ரூபா 250/-ம் மேலும் ரூபாய் 3277/-ம் இறுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குழிக் கோவிற்பற்று கரையூரிறை 'மங்கைபாகன் வயல்' நிலப்பரப்பு ஒன்றும் குளி 12, 7/8ம் கல் வீடும் குசினியும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு திருமதி கே. என். திசைவீரசிங்கியின் ஆதனம், வடக்கு கலிங்ரஸ் சந்தியாக்கோவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், மேற்கு ரோட்டு, தெற்கு வாய்க்கால் இதடங்கலும் இது கே. அலோசெஸ் உத்தரவுபெற்ற உலாந்தாவால் 2—1—1947 இல் வரைந்த படத்தில் உள்ளது,

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

தெல்லிப்பழை,
11-11-71.
M 356— 71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்

கோப்பாய். முகாந்திரம் சுப்பிரமணியம் கைம்பெண் கண்மலர்
வழ, இல. M B 3945 எதிராக —வழக்காளி

1 நாவற்குழி, சரவணை சுப்பையாவும்
2 ஷ சுப்பையா நடேசனும் பெண்
3 ஷ சந்திரமணியும் —எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் M B 3945ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப் பிரகாரம் கீழ்க்காணுமாதன விடாப்பில் விபரிக்கப்படுமாதனங்கள் 1972ம் ஞூ மாசி மாதம் 16-ம் திகதி (16—2—72) புதன்கிழமை காலை 10 மணியிலிருந்து அவ்வக காணிகளுக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 7245/-ம் 21—7—1970 தொடக்கம் 21-2-71 வரையும் ரூபா 5000/-க்கு 9 வீத வட்டியும் பின் கூட்டிவரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 365—35 சதமும்

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி நாவற்குழிக் கோவிற்பற்று நாவற்குழியிறை 'மேட்டுவளவு' கி. பர. (6) ஆறுக்கெல்லை கிழக்கு பொன்னர் அம்பலவாணருக்கும் மறுபேருக்குமுரியவாதனம், வடக்கு இராமு கதிரவேலுவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம், மேற்கு ரோட்டு தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குட் சேர்ந்தவைகளைத்திலுஞ் சோரியலாய் அரைவாசியும் கட்டிடம் கிணறு அடங்கலும்.

2 ஷ நாவற்குழியிறை 'கட்டையன்வளவு' கி. பர. 2¼ எல்லை கிழக்கு நாகலிங்கர் ஐயாத்துரைக்குரியவாதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு ரோட்டு. தெற்கு கந்தர் நாகமுத்துவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம், இதிற் சோரியலாய் (1/3) மூன்றிலொரு பங்கு

3 ஷ நாவற்குழி இறை 'கோலன்புலிச்சி' நெற். பர. 11 எல்லை கிழக்கு பொன்னர் அம்பலவாணருக்கும் மறுபேருக்குமுரியவாதனம். வடக்கு இராசையா பெண் முத்தம்மாவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம், மேற்கு முத்துக்குமாரு கந்தப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரியவாதனம், தெற்கு பொன்னர் அம்பலவாணருக்கும் கறுவல் பெண் மைலுவுக்குமுரியவாதனம் இதடங்கலும்

4. ஷ நாவற்குழியிறை கச்சாய்யூர்வளவு கி. பர 1, 7/8 எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை கைம்பெண் செல்லாச்சிக்குரியவாதனம், வடக்கு ஒழுங்கை மேற்கு கந்தையா பெண் தங்கம்மாவுக்கும் பங்காளருக்குமுரியவாதனம், தெற்கு கந்தர் நாகமுத்துவுக்கும் பங்காளருக்குமுரியவாதனம் இதடங்கலும்.

சாவகச்சேரி
மு. நா. மார்க்கண்டு
கொமிஷனர்
(352-24-12-71)

## சைவபரிபாலனசபை வெளியீடு

வென்றிமாலைக் கவிராயர் இயற்றிய திருச்செந்தூர்ப் புராணம் யாழ்ப்பாணத்து நீர்வேலி ஸ்ரீமத் ச. சிவப்பிரகாச பண்டிதர் எழுதிய உரையுடன் வெளிவந்துள்ளது. விலை ரூபா 10/-

கிடைக்குமிடம்:-
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
வண்ணை. யாழ்ப்பாணம்.

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 24—12—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்